*1*

# ஆராதனையில் இசைக்கருவிகளைப் பற்றிய விஷயம் என்ன?

*கிறிஸ்தவர்கள் தேவனை ஆராதிக்கும் செயலில் இசைக் கருவிகளைப் பயன்படுத்த வேண்டுமா அல்லது கூடாதா என்ற கேள்வியானது மிகப் பழைய கேள்வியாக உள்ளது, ஆனால் இதன் மீது சிலர் இப்போது புதுப்பிக்கப்பட்ட ஆர்வம் கொண்டுள்ளனர். வாய்ப்பாட்டை* [cappella][1] *மாத்திரமே முன்பு பயன்படுத்திக் கொண்டிருந்த ஒரு சில சபைக் குழுமங்கள், தங்கள் ஆராதனை ஊழியங்களில் வாய்ப்பாட்டுடன் இசைக்கருவிகளை இணைத்துப் பாடுதலை உள்ளடக்க முடிவுசெய்துள்ளன. சில சபைக்குழுமங்கள், இசைக்கருவிகளின் துணையை இளைஞர்கள் நிகழ்ச்சிகளில் அனுமதிக்கின்றன.*

*2007 ஜுன் மாதத்தில், பெப்பர்டின் பல்கலைக் கழகம் - "உயர ஏறும் குரல்" என்ற - வாய்ப்பாட்டின் தலைப்பின் மீது உலகளாவிய ஒரு கருத்தரங்கை நடத்தியது. அந்த நிகழ்ச்சியின் மூலமாக நான், நான் உணர்ந்து அறிந்துள்ளதைக் காட்டிலும் அதிகமான மக்கள் வாய்ப்பாட்டுக்காக போராடிக்கொண்டிருக்கின்றனர் என்று அறிந்து கொண்டேன்.*

*நாம் பழைமைவாத யூதர்கள் மற்றும் கிரேக்கப் பழைமைவாதக் கத்தோலிக்கர்கள் ஆகியோர், தங்கள் ஆராதனை ஊழியங்களில் இசைக் கருவிகளைப் பயன்படுத்தக் கூடாது என்ற முடிவைத் தேர்ந்து கொண்டுள்ளதை அறிந்திருக்கிறோம், மற்றும் இப்போது நாம், மேன்னொனைட்டுகள், சீர்திருத்த பிரிஸ்பைட்டேரியன்கள் மற்றும் பூர்வகால பேப்டிஸ்டுகள் ஆகியோரைப் பற்றியும் அறிகிறோம். "இன்றைய நாள் வரையிலும் வத்திக்கான் நகரில் உள்ள போப்பின் சொந்தச் சிற்றாலயத்தில், இசைக் கருவிகளின் துணையற்ற பாடுதல் மாத்திரமே கேட்கப்படுவதாக உள்ளது."[2]*

*இந்தத் தலைப்பின்மீதான இலக்கியத்தின் புதிய அமைப்பு ஒன்றும்கூட சமீபத்திய ஆண்டுகளில் உண்டாக்கப் பட்டுள்ளது. சீர்திருத்த பாப்டிஸ்டு பிரசங்கியாரான ஜான் பிரைஸ் என்பவர் எழுதிய புதிய ஆராதனையின் மீது பழைய வெளிச்சம்[3] என்ற புத்தகம், வாய்ப்பாடல் விஷயம் பற்றி வாசிக்கத் தகுதிவாய்ந்ததாக உள்ளது. "வாய்ப்பாட்டிற்காக"[4] என்று தலைப்பிடப்பட்ட வலைப்பக்கமும்கூட தகுதி வாய்ந்ததாகக் கருதப்படக்கூடிய கட்டுரைகளையும் கலந்துரையாடல்களையும் சித்தரிக்கிறது. ரிச்சர்டு வுல்ஃப் என்பவர், பாடல்கள், கைத்தாளங்கள் மற்றும் தம்புராக்கள்[5] என்ற புத்தகத்தைப் பதித்து வெளியிட்டார் மற்றும் டேவ் மில்லர் என்பவர் ரிச்லான்ட் ஹில்ஸ் மற்றும் இசைக்கருவிகளின் இசை[6] என்ற நூலை வெளியிட்டார்.*

நான் பிறப்பதற்கு முன்பே தமது பலனை அடையச் சென்ற எனது தாத்தா, எங்களது டெக்ஸாஸ் சிறு நகரில் கட்டப்பட்ட சபைக் கட்டிடம் அமைந்துள்ள நிலத்தை நன்கொடையாகக் கொடுத்திருந்தார். அதற்கான பத்திரப்பதிவில், அந்தக் கட்டிடத்தில் எப்போதாவது இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டால், நிலமானது அவரது வாரிசுதாரர்களுக்குத் திருப்பப்பட வேண்டும் என்ற நிபந்தனை எழுதப்பட்டிருந்தது. இது அவரது தலைமுறையில் இசைக்கருவிகள் பயன்படுத்துதலை ஆதரிப்பவர்களினால் சபையின் உடைமையானது எடுத்துச் செல்லப்படுதல் என்ற பிரச்சனையைக் கையாளக்கூடிய அவரது வழியாக இருந்தது. நான் எனது உடைமை உரிமைகளைப் பற்றி வெட்கமடைவதில்லை.

நான் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது, *இயேசு போதித்தது என்ன*[7] என்ற தலைப்பில் ஒரு புத்தகத்தை வெளியிட்டிருந்த சார்லஸ் ராபர்ஸன் என்பவரால் போதிக்கப் பட்டிருந்தேன். அந்தப் புத்தகத்தில், "கருவிகளின் இசை" என்ற தலைப்புடனான ஒரு பக்கத்தில் பின்வரும் ஒரே ஒரு வார்த்தைதான் இருந்தது: "ஒன்றுமில்லை." இது அந்த விஷயம்பற்றிய நியாயமான கூற்றாக இருக்கிறது என்று நான் இன்னமும் நினைக்கிறேன்.

## இந்தக் கேள்விக்கான பதிலை எவ்வாறெல்லாம் முடிவுசெய்யக் கூடாது

### ஆதார வசனத்தினால் அல்ல

அறுபத்தி ஆறு ஆண்டுகளுக்கு முன்பு, நான் எனது உள்ளூர்ப் பிரசங்கப் பணியை, யூதத்துவ ஆராதனையில் பாடுதலுடன் கருவி இசை இணைக்கப்படுதலானது, தாவீதின் பகுதியிலான தன்முனைப்பாக இருந்தது என்றும், அதற்காக அவரை ஆமோஸ் கண்டனம் பண்ணினார் என்றும் முழுமையாக நம்பி ஏற்றுத் தொடங்கினேன். நான், இந்தச் சிந்தனைக்கு அடிப்படையாகக் கொண்டிருந்த வசனப்பகுதி ஆமோஸ் 6:1-5 ஆகும்; "சீயோனிலே ... உங்களுக்கு ஐயோ! ... தம்புரை வாசித்துப் பாடி, தாவீதைப்போல் கீதவாத்தியங்களைத் தங்களுக்கு உண்டுபண்ணி, ..." இருப்பினும், ஒருவர் தமது ஆசிரியர்களிடத்தில் இருந்து எல்லாவற்றையும் கற்றுக்கொள்ள வேண்டும் என்று பழங்கால ரபீக்கள் கூறினர், மற்றும் நான் அதை வாழ்வின் நடையாகக் கொண்டிருக்க முயற்சி செய்தேன்.

சாம் ஹூஸ்டன் பல்கலைக் கழகத்தில் (அந்தக் காலத்தில் அது கல்லூரியாக இருந்தது) நான் சந்தித்த நாமகரணக் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு பிரசங்கியார், கருவி இசையைப் பயன்படுத்துதல் தாவீதினால் கட்டளையிடப்பட்டிருந்தது என்றும் எசேக்கியா இராஜாவுக்கு அது பாராட்டப்பட்டிருந்தது என்றும் எனக்குத் தகவல் தெரிவித்தார். அவர் தமது கூற்றை 2 நாளாகமம் 29:25 வசனப் பகுதியைப் பயன்படுத்தியதன் மூலம் ஆதாரப்படுத்தினார்:

> அவன் [எசேக்கியா], தாவீதும், ராஜாவின் ஞானதிருஷ்டிக்காரனாகிய காத்தும், தீர்க்கதரிசியாகிய நாத்தானும் கற்பித்தபடியே, கைத்தாளங்களையும் தம்புருகளையும் சுரமண்டலங்களையும் வாசிக்கிற ,லேவியரைக் கர்த்தருடைய ஆலயத்திலே நிறுத்தினான்; *இப்படிச் செய்யவேண்டும்*

*என்கிற கற்பனை கர்த்தரால் அவருடைய தீர்க்கதரிசிகளைக்கொண்டு உண்டாயிருந்தது* (என்னால் வலியுறுத்தப் படுகிறது).

இதற்கு முன் நான் இந்த வசனத்தை ஒருபோதும் ஆழ்ந்து சிந்தித்து இருக்கவில்லை. அவர் தமது உட்கண்ணோக்குகளை என்னுடன் பகிர்ந்து கொண்டதற்காக அவருக்கு நான் எப்போதுமே நன்றி நிறைந்தவனாக இருப்பேன். ஆயினும் அவர், புதிய ஏற்பாட்டு ஆராதனையில் பாடுதல் என்பது ஒரு பாகமாக இருந்ததில்லை என்றும், வாய்ப்பாட்டு இசையைப் பரிந்துரைப்பவர்கள் அதை ஆராதனையின் ஒரு பாகமாக்குவதில் தவறு செய்கின்றனர் என்றும் அவர் வலியுறுத்தியபோது, நான் இப்போது செய்வது போன்றே கருத்து வேறுபட்டேன்.

ஆமோஸ் தீர்க்கதரிசனப் புத்தகத்தில் ஒன்றும், 2 நாளாகமத்தில் ஒன்றுமான இவ்விரு வசனப்பகுதிகளின் ஆவியையும் எவ்வாறு இசைவிணக்கம் செய்வது என்பது என்னைக் கலங்கச் செய்தது. தீர்க்கதரிசனப் புத்தகங்களை நான் அதிகமாகப் படிக்கையில், ஆதார வசனம் காண்பித்தல்[8] என்பது வேத வசனப்பகுதி ஒன்றின் அர்த்தத்தைத் தீர்மானிக்கத் தகுதியான வழியாக இருப்பதில்லை என்பது பற்றி நான் உணர்வடைந்தேன். அப்படியானால், ஆமோஸ் 6:5ஐ நாங்கள் அப்போது பயன்படுத்திக் கொண்டிருந்த விதமானது இவ்வாறாகவே இருந்தது. ஆமோஸ் தீர்க்கதரிசனத்தில் உள்ள இவ்வசனப் பகுதியானது ஆராதனையின் சந்தர்ப்பப் பொருளில் இல்லவே இல்லை. அங்கு குறிப்பிடப் பட்டுள்ள மற்ற நடவடிக்கைகள் ஆராதனையின் செயல்பாடுகள் அல்ல; அவைகள் பொழுதுபோக்கிற்கு ஆனவைகளாக உள்ளன. அந்தப்பட்டியலைக் கண்ணோக்குங்கள்: இந்த மக்கள் தந்தக் கட்டில்களில்படுத்துக்கொண்டு, தங்கள் மஞ்சங்களின்மேல் சவுக்கியமாய்ச் சயனித்து, மந்தையிலுள்ள ஆட்டுக்குட்டிகளையும், மாட்டுத்தொழுவத்திலுள்ள கன்றுக்குட்டிகளையும் தின்று, தம்புரை வாசித்துப் பாடி, தாவீதைப்போல் கீதவாத்தியங்களைத் தங்களுக்கு உண்டுபண்ணி, பெரிய பாத்திரங்களில் மதுபானத்தைக்குடித்து, சிறந்த பரிமளதைலங்களைப் பூசிக்கொள்ளுகிறார்கள். இவர்கள், ஆமோஸ் அச்சுறுத்தியதான வடக்கு இராஜ்யத்தின் அழிவு பற்றி அக்கறை இல்லாதிருந்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டனர். இவர்களின் கவனமற்ற, சோம்பேறித்தனமான வாழ்வு நடையும் உண்மை நிலைகளுக்குள்ளாக உட்கண்ணோக்குச் செய்வதில் குறைவுபடுதலும் இடித்துரைக்கப்பட்டிருந்தது. இது ஆராதனை பற்றிய விவாதத்தின் ஒரு பாகம் என்று குறிப்பிடுவதற்குப் பழைய ஏற்பாட்டின் நிரூபண வசனம் என்று இனியும் குறிப்பிடப் படலாகாது. இது இணங்கச் செய்யும் வல்லமை எதையும் கொண்டிருப்பதில்லை.

**மனித கண்டுபிடிப்பினால் அல்ல**

மிக சமீபத்தில், இசைக்கருவிப் பயன்பாட்டை ஆதரித்த ஒரு பெண்மணி என்னை அழைத்தார். இசைக் கருவிகள் புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப் பட்டிருப்பதில்லை என்பதால் அவைகளைப் பயன்படுத்தக் கூடாது என்ற அந்தக் கருத்தை மறுத்துரைக்க அவர் விரும்பினார். தேவனுடைய குறிப்புரைகளைக் கொண்டு (இதைப் பற்றி எவரொருவரும் கேள்வி கேட்க இயலாது) நோவா பேழையைக் கட்டினார் என்று அந்தப் பெண்மணி கூறினார்; ஆனால் நோவா தம்முடன் படுக்கைகள், நாற்காலிகள், மேஜைகள் மற்றும் தலையணைகள்

*ஆகியவற்றை எடுத்துச் சென்றிருப்பார் என்று அந்தப் பெண்மணி நம்பினார். "பேழையில் நோவா இந்த விஷயங்களைக் கொண்டிருந்தார் என்று நீங்கள் எவ்விதம் அறிந்தீர்கள் என்று நீங்கள் எனக்குக் காண்பித்தால், பின்பு நாம் கலந்துரையாடலைத் தொடரக்கூடும்" என்பதே எனது பதிலாக இருந்தது. மனித கண்டுபிடிப்புகள் வேதாகம அதிகாரத்துவத்தை அமைப்பது இல்லை.*

**(குறிப்பிட்ட நிகழ்வில்) தொடர்புடையவர்களின் வாழ்வை உற்றுநோக்குவதால் அல்ல**

*வயோமிங் நகரில் உள்ள ஒரு மனிதர், எனக்கு ஒரு மின்-அஞ்சல் அனுப்பினார், அதில் அவர் தம்மை, இசைக்கருவிகள் பயன்பாட்டை நம்பும் மனிதராக விவரித்தார், ஆனால் தற்போது அவர் இசைக்கருவிகளைப் பயன்படுத்தாத ஒரு சிறு சபைக்குழுமத்தில் ஆராதித்துக் கொண்டிருந்தார். அவர் இந்தக் கேள்வியைப்படித்து இரு குழுக்களிலும் உள்ள மக்களின் வாழ்வைப் பரிசீலனை செய்து கொண்டிருந்தார். அவற்றில் எந்தக் கிறிஸ்தவர்களின் வாழ்வு அதிகம் விரும்பத் தக்கதாத உள்ளதோ, அதன் அடிப்படையில் எங்கு ஆராதனை செய்வது என்பதைத் தீர்மானிக்க அவர் விருப்பநோக்கம் கொண்டு இருந்தார். இப்போது, ஒவ்வொரு மதக்குழுவும் அதன் விசுவாசம் நிறைந்த உறுப்பினர்களை, கவலையீனமானவர்களை மற்றும் விசுவாசத்தில் இருந்து பின்வாங்கிப் போகின்றவர்களைக் கொண்டுள்ளது. மனிதரின் முறைமை தவறானதாக இருந்தது. விளைவு என்பது, அவர் இந்தப் படிப்பில் யாரை உள்ளடக்கினார் என்பதையே முற்றிலும் சார்ந்ததாக இருக்கும். இது, எந்தக் கேள்வியின்மீதும் வேதாகமரீதியான போதனையைத் தீர்மானிக்கும் வழியல்ல.*

*பல்வகையான கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களில் செலவிடப்பட்ட எனது வருடங்கள், எனக்கு பல்வகையான மதக்குழுக்களைச் சேர்ந்த மக்களுடனான தொடர்பைக் கொடுத்துள்ளன. வெவ்வேறு சபைத் தொடர்புடைய வேதாகம விரிவுரையாளர்கள் நால்வர் பங்கேற்ற வேதாகம ஆய்வு விளக்கத் திட்டம் ஒன்றை நான் செயல்படுத்தினேன்.* NIV *வேதாகம மொழிபெயர்ப்புத் திட்டத்திற்கும் இதே விஷயம் உண்மையாக இருந்தது. நான், நேர்மையான, ஆவிக்குரிய, வைராக்கியம் கொண்ட மக்கள் பலரைச் சந்தித்தேன். நாங்கள் வேறுபடுகிறோம், ஆனால் அவர்களின் இறையியல் நம்பிக்கைகளை நான் மறுப்பதற்கு, அவர்களைக் காட்டிலும் நான் அதிகம் நேர்மையானவன் என்று நான் சிந்தித்தது காரணமாக அமையவில்லை (அதாவது, நான் அவ்வாறு நினைக்கவில்லை).*

## தற்போதுள்ள சூழ்நிலை குறித்து செய்யப்பட வேண்டியது என்ன?

*பல ஆண்டுகளுக்கு முன்னர், இல்லினாய்ஸ் மாகாணத்தின் லிங்கன் நகரில் உள்ள லிங்கன் இறையியல் குருமடத்தில், "தீர்க்கதரிசனப் புத்தகங்களின் ஒழுக்க போதனைகள்" என்ற தலைப்பில், கல்வியியல் விரிவுரை அளிப்பதற்கு நான் அழைக்கப்பட்டிருந்தேன். நான் அவர்களிடத்தில் எவ்வித விசேஷ விலக்குகளையும் கேட்டுக்கொள்ளவில்லை, அவர்களும் என்மீது எவ்வித விசேஷ கட்டுப்பாடுகளையும் விதிக்கவில்லை. ஏற்பாடுகள் அல்லது*

அறிமுகங்கள் ஆகியவற்றிற்கு நான் பொறுப்பாளியாக இருக்கவில்லை. விரிவுரைகளின்போது, ஒவ்வொரு கூட்டமும் இசைக்கருவிகளின் இசை நிகழ்வுடன் தொடங்கிற்று. நான் அங்கிருந்த வேளையில், அதன் நிர்வாகி தமது இல்லத்திற்கு இரவு உணவு உண்ண வரும்படி கனிவுடன் அழைத்தார். உரையாடலில் அவர். இசைக்கருவிகள் பயன்படுத்துவதை ஆதரிப்பவர்களுடன் இசைக்கருவிகள் பயன்படுத்துவதை ஆதரிக்காதவர்களை ஒன்றிணைக்கத் தற்போது எடுக்கப்பட்டு வந்த முயற்சிகளைப் பற்றி நான் நினைப்பது என்ன என்று அவர் என்னிடத்தில் கேட்டார். நான் அவரிடத்தில், இசைக்கருவி பயன்படுத்துவதை அவர் விட்டுவிடுதல் எவ்விதமாகும் அல்லது நாங்கள் அதை ஏற்றுக்கொள்வது எவ்விதமாகும் என்று நான் காணவில்லை என்பதாக அன்புடன் ஆனால் வெளிப்படையாகக் கூறினேன். (தற்போதுள்ள முன்னேற்றங்கள் என்னை, அந்தக்கூற்றின் இரண்டாம் பகுதியைப் பொறுத்த மட்டில் அப்போது இருந்ததைக் காட்டிலும் குறைவான நிச்சயம் கொண்டவனாக மாற்றும். இருப்பினும், மக்களில் பலர் தற்போதைய பாணிகளுக்கு எதிராக உறுதியாக நிற்கின்றனர்.) முதல்வர், ஒன்றிணைப்பு எப்போதாவது சாதிக்கப்பட வேண்டும் என்றால், ஐம்பது வயதிற்கு உட்பட்ட பிரசங்கியார்கள் அதைக் கொண்டு வரவேண்டும் என்று கூறினார். அவர் எதை அர்த்தப்படுத்தினார் என்று என்னால் சுலபமாக காண முடிந்தது. இந்தக் கேள்வியின்மீது மையங்கொண்ட எத்தனை பிரசங்கங்களை நாம் கடந்த ஐம்பது ஆண்டுகளில் கேள்விப்பட்டிருக்கிறோம்? எத்தனைப் பாடவகுப்புகளில் கணிசமான அளவுக்கு நாம் இதைப்பற்றிப் படித்திருக்கிறோம். நமது பிரசங்கியார்களும் போதகர்களும் இந்தப் பாடக் கருத்தைப்பற்றிப் பேசுவதை நிறுத்தியுள்ளனர், எனவே நாம் (பேச்சிற்கு) யோசேப்பை அறியாத புதிய அரசனைக் கொண்டிருந்தவர்களைப் போன்று இருக்கிறோம். சபையில் உள்ளவர்களில் திரளான கூட்ட மக்கள் இதை ஒரு தீவிரமான பிரச்சனையாக எடைபோட்டிருக்கவில்லை. இசைக்கருவிகளுக்கு ஆதரவாக முன்னிறுத்தப்பட்ட பழைய விவாதங்கள், புதியனவாகவும் அவற்றிற்குப் பதில் அளிக்கப் பட்டிராதனவாகவும் காணப்படுகின்றன. வேதாகமத்தில், இளம் ஆலோசனையாளர்கள் எதிர் முதிர் ஆலோசனையாளர்கள் பற்றியும் அந்தச் சூழ்நிலையின் விளைவு பற்றியும் ஒரு வரலாறு உள்ளது (1 இராஜாக்கள் 12:6-11).

*The Christian Chronicle* என்ற மாத இதழின் அக்டோபர் 2007 பதிப்பு, வாய்ப்பாட்டைப் பயன்படுத்துதலைப் போதித்துப் பிரசங்கிக்கும் ஐம்பத்தைந்து மற்றும் அதைவிட இளைய வயதுடைய நூற்றுக்கணக்கான பிரசங்கியார்களின் கையெழுத்துக்களுடன் இரண்டுபக்க விலைசெலுத்தப்பட்ட விளம்பரம் ஒன்றைக் காட்சிப்படுத்திற்று.[9] அதே இதழானது ஐநூறுக்கும் மேற்பட்ட பிரசங்கியார்கள் கலந்துகொண்டு கையெழுதிட்ட "சமாதானத்திற்கான ஒரு ஒப்பந்தம்" என்ற நிகழ்ச்சியின் இருபத்தி ஐந்தாவது மற்றும் நிறைவான ஒன்றிணைப்பு மாநாடு பற்றியும் செய்தி வெளியிட்டது.[10] இந்தப் பதிவேட்டில் அவர்களின் கையொப்பங்கள், வாய்ப்பாட்டைப் பாடும் கிறிஸ்துவின் சபைகளும் இசைக்கருவிகளைப் பயன்படுத்தும் கிறிஸ்தவ சபைகளும் ஒன்றிணைக்கப்பட வேண்டும் என்பதற்கான அவர்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்திற்று. இசைக் கருவிகள் பற்றிய கேள்வியானது இன்னும் உயிருடன் இருக்கிறது.

குறிப்புகள்

[1]"A cappella" என்பது "சிற்றாலயத்தின் பாணியில்" என்ற நேரடி அர்த்தம் கொண்டுள்ளது, இது இசைக் கருவிகளின் துணையின்றிப் பாடுதலைச் சுட்டிக்காண்பிக்கிறது. [2]Henry Wilder Foote, *Three Centuries of American Hymnody* (Cambridge: Harvard University Press, 1940; reprint, Hamden, Conn.: Archon Books, 1968), 87. [3]John Price, *Old Light on New Worship* (Avinger, Tex.: Simpson Publishing Co., 2007). [4]Visit foracappella.Org. [5]Richard E. Wolfe, *Songs, Cymbals, and Tambourines: The Music of Scripture* (Nashville: 21st Century Christian, 1998). [6]Dave Miller, *Richland Hills & Instrumental Music: A Plea to Reconsider* (Pulaski, Tenn.: Sain Publications, 2007). [7]Charles Heber Roberson, *What Jesus Taught* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1930), 480. [8]"Proof-texting" என்பது "ஒரு கருத்தை நிரூபிக்கும் முயற்சியில்" வேதவசனங்களை (அல்லது அதிகாரப் பூர்வமான பிற வசனங்களை) சந்தர்ப்பப் பொருளில் இருந்து முற்றிலும் விலக்கி மேற்கோள் காண்பித்தல் ஆகும். [9]"A Time to Speak," *The Christian Chronicle* 64 (October 2007): 24-25. [10]"More than 500 sign 'Pact for Peace' at Forum," *The Christian Chronicle* 64 (October 2007): 6.